**செ.வெ. எண்: 531** **நாள்: 22.08.2011 .**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (22.8.2011) தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இந்திரா நகரில் வசிக்கும் திரு. மா. சங்கரசுப்பு அவர்களின் 8 மாத குழந்தை மதிலட்சுமியின் இருதய அறுவை சிகிச்சைக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 62 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இந்திரா நகரில் வசிக்கும் திரு. மா. சங்கரசுப்பு அவர்கள் தான் ஏழ்மை நிலையில் கூலி வேலை செய்து சிரமத்துடன் வாழ்ந்து வருவதாகவும், அவரது 8 மாத குழந்தை மதிலட்சுமிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை மேற்கொண்டபோது, குழந்தைக்கு இருதய அறுவை சிகிச்சை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மருத்துவர் அறிவுறுத்தினார் என்றும், இருதய அறுவை சிகிச்சை உடனடியாக மேற்கொள்ள தங்களது குடும்பத்தின் வறிய நிலையை கருத்தில் கொண்டு நிதியுதவி வழங்கி, குழந்தையை காப்பாற்றிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு கோரிக்கை மனுவினை அளித்திருந்தார்.

அவரது கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குழந்தை மதிலட்சுமியின் இருதய அறுவை சிகிச்சை உடனடியாக மேற்கொள்ள ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 62 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையினை இன்று தலைமைச் செயலகத்தில் குழந்தையின் தந்தை திரு. மா. சங்கரசுப்பு அவர்களிடம் நேரில் வழங்கி குழந்தை மதிலட்சுமி மருத்துவ சிகிச்சைப் பெற்று விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்பவும், எல்லா நலன்களையும் பெறவும் தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதியுதவியினைப் பெற்றுக் கொண்ட திரு. மா. சங்கரசுப்பு அவர்கள் தனது குழந்தையின் உயிரைக் காப்பாற்ற நிதியுதவி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

* * * * * *

வெளியீடு: ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 22.8.2011